*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*16 12 2025 TUESDAY 12 40 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

- *இந்தியா -* **Jordan** *இடையிலான இருதரப்பு ஒத்துழைப்புகள் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*
- *பாகிஸ்தானுக்கு எதிராக 1971-ஆம் ஆண்டு நடைபெற்ற போரில் இந்தியா வெற்றி பெற்றதை நினைவுகூரும் வகையில் விஜய் திவஸ் இன்று கொண்டாடப்படுகிறது.*
- *வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான கிராமப்புற வேலை உறுதி மற்றும் வாழ்வாதார இயக்க மசோதா, மக்களவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.*
- *போர்க் குற்ற விசாரணையை எதிர்த்து, இஸ்ரேல் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.*
- *19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், மலேசியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா முதலில் பேட் செய்து வருகிறது.*

*>>>>><<<<<*

*1971-ஆம் ஆண்டு நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போரில் இந்தியா வெற்றி பெற்றதை நினைவுகூரும் வகையில் விஜய் திவஸ் இன்று கொண்டாடப்படுகிறது.*

*இந்நாளையொட்டி குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில். தாய்நாட்டை பாதுகாப்பதில் இந்திய வீரர்களின், துணிச்சல், வீரம் மற்றும் அர்ப்பணிப்பு ஈடுஇணையற்றது என்று குறிப்பிட்டுள்ளார்.*

*இவர்களது தியாகத்தால் நாடு பெருமிதம் அடைவதாகவும் அவர் கூறியுள்ளார்.*

*குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்திய படையினரின் துணிச்சல், பாகிஸ்தானுக்கு எதிரான போரில் வெற்றி தேடி தந்ததாகவும், பங்களாதேஷ் தனிநாடாக உருவாக வழிவகுத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்திய வீரர்களின் தீரம் மற்றும் தியாகத்தால் நாடு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை பெற்றதாக கூறியுள்ளார்.*

*அவர்களது வீர – தீர செயல்பாடு, வருங்கால சந்ததியினருக்கும் ஊக்கமளிக்கும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.*

*இந்நாளையொட்டி, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், புதுதில்லியில் உள்ள தேசிய போர் நினைவுச் சின்னத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.*

*>>>>><<<<<*

*இந்தியா -* **Jordan** *இடையிலான இருதரப்பு ஒத்துழைப்புகள் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*தமது ஜோர்டான் பயணத்தின் முடிவில், அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இரு நாடுகளிடையேயான ஒத்துழைப்பு, எரிசக்தி பாதுகாப்பு மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பான உறுதிப்பாடுகளை வெளிப்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.*

*நீர்வள ஆதாரங்களை மேம்படுத்துவது, தண்ணீர் சிக்கனம் மற்றும் பயன்பாட்டிற்கான சிறந்த தொழில்நுட்பங்களை பரஸ்பரம் பரிமாறிக்கொள்ள உதவும் வகையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதையும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*>>>>><<<<<*

*வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான கிராமப்புற வேலை உறுதி மற்றும் வாழ்வாதார இயக்க மசோதா மக்களவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.*

*வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் இதனை தாக்கல் செய்தார்.*

*கடந்த 2005ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்திற்கு மாற்றாக இந்த புதிய மசோதா தாக்கல் செய்யப்பட்டது.*

*இதன்படி, கிராமப்புற மக்களுக்கு ஆண்டுக்கு 125 நாள் வேலை வழங்க இந்த மசோதா வகை செய்கிறது.*

இந்த மசோதா கிராமப்புற பொருளாதாரத்தை வலுப்படுத்தி வருவாயை அதிகரிக்கவும் வகை செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இந்தியா - மத்திய கிழக்கு - ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான பொருளாதார பெருவழித்தட திட்டத்தை செயல்படுத்த இந்தியாவும் - ஐக்கிய அரபு எமிரேட்டும் உறுதிபூண்டுள்ளன.

ஐக்கிய அரபு எமிரேட் சென்ற வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், அபுதாபியில் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் Sheikh Abdulla Bin Zayed Al Nahyan-னுடன் நடத்திய பேச்சுவார்த்தையை தொடர்ந்து வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பேச்சுவார்த்தையின் போது, வர்த்தகம், எரிசக்தி, பாதுகாப்பு, சாலை மேம்பாடு, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

மேற்காசிய நிலவரம் குறித்த கருத்துக்களை, இரு அமைச்சர்களும் ஆலோசித்ததாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, வேளாண் சாகுபடியில் மாற்றத்தை ஏற்படுத்தி வருவதாக நித்தி ஆயோக் கூறியுள்ளது.

இதன்படி, வேளாண் பணிகள் குறித்த தரவுகள், வானிலை பற்றிய முன்னறிவிப்புகள் டிஜிட்டல்மயமாக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

16 மில்லியன் ஏக்கர் நிலங்கள் பற்றிய விவரங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதால், 70 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளதாக நித்தி ஆயோக்கின் சமூகவலைதளப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தின் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், புதிதாக கேந்திரிய வித்யாலயா பள்ளி தொடங்கப்படவுள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

மக்களவையில் இதனை தெரிவித்த அவர், நாடுமுழுவதும் மொத்தம் 57 புதிய கேந்திரிய வித்யாலயா பள்ளிகளை திறக்க அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் ஏற்கனவே 46 கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் இயங்கி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் ஒரு பள்ளியும், கோவை மாவட்டத்தில் 3 கேந்திரிய வித்யாலயா பள்ளிகளும் செயல்பட்டு வருவதாக கூறிய திரு. தர்மேந்திர பிரதான், இவ்விரு மாவட்டங்களிலும் புதிய பள்ளிகளை திறப்பது தொடர்பாக மாநில அரசிடமிருந்து கோரிக்கை எதுவும் வரப்பெறவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்குப் பிறகு மேற்குவங்கம் மற்றும் புதுச்சேரியில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, மேற்குவங்கத்தில் 58 லட்சத்து 80 ஆயிரம் வாக்காளர்களின் பெயர்களும், புதுச்சேரியில் 85 ஆயிரம் வாக்காளர்களின் பெயர்களும் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், தமிழகத்தின் ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர், தத்தமது பகுதியில் 100 சதவீத கணக்கீட்டு படிவங்களை வாக்காளர்களிடமிருந்து பெற்று, பதிவேற்றம் செய்துள்ளதாக கூறியுள்ளார்.

(சவுண்ட் பைட் - தமிழ்மலர் - 48 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

காஸா போர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணையை எதிர்த்து, இஸ்ரேல் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலை தொடர்ந்து, இஸ்ரேல் படைகள் காஸாவில் நடத்தி வரும் தாக்குதல் தொடர்பான போர்க்குற்ற விசாரணைக்கு தடை விதிக்கக் கோரி, இஸ்ரேல் இந்த மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்திருந்தது.

>>>>><<<<<

மெக்ஸிகோவில் சிறிய ரக விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில், 7 பேர் உயிரிழந்தனர்.

*விமானிகள் உட்பட 10 பேர் பயணம் செய்த இந்த விமானம், தரையிறங்க முற்பட்டபோது, கட்டிடத்தின் மீது மோதி தீப்பற்றியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.*

*சம்பவ இடத்திலிருந்து 7 பேரின் உடல்கள் மீட்கப்பட்டிருக்கும் நிலையில், எஞ்சிய மூவரை தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் அந்த அதிகாரிகள் கூறியுள்ளனர்.*

*>>>>><<<<<*

*மத்தியப்பிரதேசம் மற்றும் உத்தரபிரதேச மாநிலங்களில் இன்று கடும் பனிமூட்டம் காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*பஞ்சாப், ஹரியானா, தில்லி மற்றும் ஹிமாச்சலப்பிரதேசத்தின் ஒரு சில பகுதிகளிலும் இதேநிலை காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*வடகிழக்கு மாநிலங்களிலும், அடுத்த மூன்று தினங்களுக்கு பனிமூட்டம் காணப்படும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.*

*இதனிடையே, தில்லியில் பனிமூட்டம் காரணமாக, ரயில் மற்றும் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.*

*பல விமானங்களின் சேவையில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியின், மலேசியாவுக்கு எதிரான ஆட்டத்தில் முதலில் பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன்வரை 33 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 230 ரன் எடுத்துள்ளது.*

*துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற மலேசியா முதலில் பந்து வீச தீர்மானித்தது.*

*>>>>><<<<<*

*Stockholm-ல் நடைபெற்ற Nordic Open Wushu போட்டியில் இந்தியா, 8 தங்கம், 4 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்றது.*

*>>>>><<<<<*

பங்களாதேஷ் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் திவ்யம் சச்தேவா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<<